DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 114/2024

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| பெயர்: | தவமணி | ஜாதி: | |
|---|---|---|---|
| தந்தை / கணவர் பெயர் : | முருகன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 16/07/2026

(1,2எதிரிகள் ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் எம்.அம்மாபட்டியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 28.01.2024 ஆம் தேதி நான் மாங்கரை பிரிவு ஒயின் ஷாப்பில் இருந்தபோது அங்கே பலர் சத்தம் கேட்டது. அங்கு சிலர் வாய் சண்டை போட்டுக் கொண்டார்கள். கூட்டத்தில் அடையாளம் தெரியாத சிலர் என்னை அடித்துவிட்டார்கள். அதில் எனக்கு இடது கை தோள்பட்டை, இடது கால், வாயில் இடது பக்கம் ரத்த காயம் ஏற்பட்டது. உடனே நான் போக்கு வண்டியை பிடித்து திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்பு ரெட்டியார்சத்திரம் போலீசார் மருத்துவமனைக்கு வர மேற்படி சம்பவம் குறித்து எனக்கு காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 28.01.2024 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் நான் மாங்கரை பிரிவு ஒயின் ஷாப்பிற்கு சென்று பிராந்தி வாங்கி கொண்டு ஒயின் ஷாப் பாரில் சாப்பிட உட்கார்ந்தேன் என்றும், அப்போது எனக்கு அருகில் சுரேஷ் கண்ணனும் அப்போது

எங்கள் ஊரைச்சேர்ந்த பெரியசாமி மகன் ஜோதிமணி பீர் பாட்டிலை பக்கத்தில் வைத்துக் கொண்டு பேசிக் கொண்டு இருந்தார்கள் என்றும் அப்போது சுரேஷ்கண்ணன் ஜோதி மணியிடம் என்னை பார்த்து இந்த தேவிடியா மகன்தான் எங்க வீட்டிற்கு இ.பி. லைன் எடுக்க விடமால் தடுத்தான் என்று அசிங்கமாக பேசினார் என்றும், நான் சுரேஷ் கண்ணனிடம் தேவையில்லாமல் எதுக்கு என்ன அசிங்கமாக பேசுற என்று கேட்டதற்கு அப்போது சுரேஷ்கண்ணன் ஏண்டா தேவிடியா மகனே என்னை எதிர்த்தா பேசுற என்று சொல்லி என் கண்ணத்தில் ஓங்கி அறைந்தார் என்றும், நான் சத்தம்போடவும் ஜோதிமணி இவனை இப்படியே விடக்கூடாது என்று சொல்லி பக்கத்தில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து உடைத்து எனது இடது கெண்டை கால், இடது கை தோள்பட்டை, வாயில் இடது பக்கம் ஆகிய இடங்களில் பாட்டிலால் குத்தி காயத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும், நான் வலியால் சத்தம் போட முருகன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் வர சுரேஷ்கண்ணனும், ஜோதி மணியும் என்னை பார்த்து இன்னிக்கு தப்பிச்சுட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொலை மிரட்டல் செய்துவிட்டு இங்கே இருந்து சென்றுவிட்டனர் என்றும், பின்பு நான் ஒரு போக்குவண்டியை பிடித்து திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்து சிக்சை பெற்று வந்தேன் என்றும் அப்போது ரெட்டியார்சத்திரம் போலீசார் என்னை விசாரித்து சுரேஷ்கண்ணன் மற்றும் ஜோதி மணி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், அதில் எனது மனைவி சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN — Digitally signed by PRAVEENA SUBBARAYAN Date: 2026.07.16 18:09:01 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 16/07/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 114/2024

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கோமதி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | தவமணி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 16/07/2026

(1,2 எதிரிகள் ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் எம்.அம்மாபட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 28.01.2024 ஆம் தேதி அன்று எனது கணவர் எனக்கு போன் செய்து அவருக்கு அடிப்பட்டுவிட்டது என்று எனக்கு தகவல் சொன்னார். பின்பு நான் அவர் சிகிச்சை அனுமதிக்கப்பட்டு இருந்த வடமலையான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு ரெட்டியார்சத்திரம் போலீசார் மருத்துவமனைக்கு வர மேற்படி சம்பவம் குறித்து எனது கணவருக்கு காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் எனது கணவர் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 28.01.2024 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் எனது கணவர் மாங்கரை பிரிவு ஒயின் ஷாப்பிற்கு சென்று பிராந்தி வாங்கி கொண்டு ஒயின் ஷாப் பாரில் சாப்பிட உட்கார்ந்து இருந்தார் என்றும், அப்போது அவருக்கு அருகில் சுரேஷ் கண்ணனும் அப்போது எங்கள் ஊரைச்சேர்ந்த பெரியசாமி மகன் ஜோதிமணி பீர்

பாட்டிலை பக்கத்தில் வைத்துக் கொண்டு பேசிக் கொண்டு இருந்தார்கள் என்றும் அப்போது சுரேஷ்கண்ணன் ஜோதி மணியிடம் எனது கணவரை பார்த்து இந்த தேவிடியா மகன்தான் எங்க வீட்டிற்கு இ.பி. லைன் எடுக்க விடமால் தடுத்தான் என்று அசிங்கமாக பேசினார் என்றும், சுரேஷ் கண்ணனிடம் தேவையில்லாமல் எதுக்கு என்ன அசிங்கமாக பேசுற என்று கேட்டதற்கு அப்போது சுரேஷ்கண்ணன் ஏண்டா தேவிடியா மகனே என்னை எதிர்த்தா பேசுற என்று சொல்லி எனது கணவரின் கண்ணத்தில் ஓங்கி அறைந்தார் என்றும், எனது கணவர் சத்தம்போடவும் ஜோதிமணி இவனை இப்படியே விடக்கூடாது என்று சொல்லி பக்கத்தில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து உடைத்து எனது கணவரின் இடது கெண்டை கால், இடது கை தோள்பட்டை, வாயில் இடது பக்கம் ஆகிய இடங்களில் பாட்டிலால் குத்தி காயத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும், எனது கணவர் வலியால் சத்தம் போட முருகன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் வர சுரேஷ்கண்ணனும், ஜோதி மணியும் என்னை பார்த்து இன்னிக்கு தப்பிச்சுட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொலை மிரட்டல் செய்துவிட்டு இங்கே இருந்து சென்றுவிட்டனர் என்றும், பின்பு எனது கணவர் ஒரு போக்குவண்டியை பிடித்து திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்து சிக்சை பெற்று வந்தார் என்றும் அப்போது ரெட்டியார்சத்திரம் போலீசார் எனது கணவரை விசாரித்து சுரேஷ்கண்ணன் மற்றும் ஜோதி மணி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Judicial Magistrate
Oddanchatram.
Date : 16/07/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 114/2024

List of Witness : Lw3

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பெருமாள் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 16/07/2026

(1,2 எதிரிகள் ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் எம்.அம்மாபட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 28.01.2024 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் நானும், எனக்கு தெரிந்த செந்தில்குமார் என்பவரும் மாங்கரை பிரிவு ஒயின் ஷாப்பில் இருந்தபோது பின்னர் விசாரித்து தெரிந்த தவமணி என்பவர் பிராந்தி வாங்கி கொண்டு ஒயின் ஷாப் பாரில் சாப்பிட உட்கார்ந்து இருந்தார் என்றும், அப்போது அவருக்கு அருகில் சுரேஷ் கண்ணனும் அப்போது பெரியசாமி மகன் ஜோதிமணி பீர் பாட்டிலை பக்கத்தில் வைத்துக் கொண்டு பேசிக் கொண்டு இருந்தார்கள் என்றும் அப்போது சுரேஷ்கண்ணன் ஜோதி மணியிடம் அ.சா.1 தவமணியை பார்த்து இந்த தேவிடியா மகன்தான் எங்க வீட்டிற்கு இ.பி. லைன் எடுக்க விடமால் தடுத்தான் என்று அசிங்கமாக பேசினார் என்றும், சுரேஷ் கண்ணனிடம் தேவையில்லாமல் எதுக்கு என்ன அசிங்கமாக பேசுற என்று கேட்டதற்கு அப்போது சுரேஷ்கண்ணன் ஏண்டா தேவிடியா மகனே என்னை எதிர்த்தா பேசுற

என்று சொல்லி அ.சா.1னின் கண்ணத்தில் ஓங்கி அறைந்தார் என்றும், அ.சா.1 சத்தம்போடவும் ஜோதிமணி இவனை இப்படியே விடக்கூடாது என்று சொல்லி பக்கத்தில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து உடைத்து அ.சா.1ன் இடது கெண்டை கால், இடது கை தோள்பட்டை, வாயில் இடது பக்கம் ஆகிய இடங்களில் பாட்டிலால் குத்தி காயத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும், அ.சா.1 வலியால் சத்தம் போட நானும், செந்தில்குமாரும் வர சுரேஷ்கண்ணனும், ஜோதி மணி அ.சா.1ஐ பார்த்து இன்னிக்கு தப்பிச்சுட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொலை மிரட்டல் செய்துவிட்டு இங்கே இருந்து சென்றுவிட்டனர் என்றும், பின்பு அ.சா.1 ஒரு போக்குவண்டியை பிடித்து திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்து சிக்சை பெற்று வந்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Judicial Magistrate
Oddanchatram.
Date : 16/07/2026